★ விலை ரூபா 1-00

1982-10-

**YARL HALL**
93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
பகல் நேர வகுப்புகள்
மாலை 1-15 முதல் 5-15 வரை
தாவரவியல், இரசாயனம்
விலங்கியல், பிரயோக கணிதம்
பௌதிகம், தூயகணிதம்
ஆரம்பம் 25-10-82
4934

# ஈழநாடு
THE EELANADU

நாவலர் கல்விநிலையம்
மானிப்பாய் வீதி, சித்தன்கேணி
தமிழ், ஆங்கில
சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு
தட்டெழுத்து
ஆரம்பம்: 25-10-82
திங்கள் காலை 10 மணி
G. C. E. A/L, O/L வகுப்புகள்
யாவும் நடைபெறுகின்றன
4938

மலர் 24 ஐப்பசி 7 முஹற 6 இதழ் 253
யாழ்ப்பாணம் - ஞாயிற்றுக்கிழமை 24—10—82

# அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு தடை!

## ஐ. ஜி. பி. அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்-

நாட்டின் எந்த மூலை முடுக்கிலும் அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்கோ, ஊர்வலங்கள் நடாத்துவதற்கோ அனுமதி வழங்க வேண்டாமென்று சகல மாவட்டங்களிலுமுள்ள பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு ஐ ஜி. பி. உத்தரவிட்டுள்ளார்.

இவ்விதமான அரசியல் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் மீறி நடாத்தும் பட்சத்தில் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் திரு. ருத்ரா ராஜசிங்கம் எச்சரிக்கை செய்துள்ளார்.

இம்மாதம் முடியும் வரை இந்தச் சட்டவிதிகள் அமுலில் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தினமான அக்டோபர் 20ம் திகதி நாட்டின் சில பகுதிகளில் வன்செயல் நடவடிக்கைகள் ஏற்பட்டதனால் அது ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடுமென்றும் கருதி அவசர காலச்சட்டம் அன்று இரவு 6 மணி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது தெரிந்தது. ஆனாலும் இப்போது நாட்டில் பூரண அமைதியும், கட்டுப்பாடும் நிலவி வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமுலிலிருக்கும் அவசர காலச்சட்டம் விரைவில் நீக்கப்பட்டுவிடுமென்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். [வெ]

## ஜே. ஆருக்கு தட்சர் வாழ்த்து

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

''மேலும் ஒரு காலகட்டத்துக்கு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு எனதும், எமது மக்களதும் வாழ்த்துக்கள்'' என்று அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [இ]

## "தவறை விரைவில் புரிந்துகொள்வர்" -ஜே. வி. பி.

(கொழும்பு]

''நாட்டை மீட்க நாம் முன்வைத்த திட்டங்களை மக்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் எனினும் இத் தீர்ப்பு தவறு என்பதை விரைவில் மக்கள் புரிந்து கொள்வார்கள்'' என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. லயனல் போபகே தேர்தல் முடிவுகள் குறித்து விடுத்துள்ள அறிக்கையொன்றில்

[8-ம் பக்கம் பார்க்க]

## "ஐ. தே. க. வுக்கு கிடைத்த வெற்றி தற்காலிகமானது! எப்போதும் மக்களுடனேயே இருப்பேன்" - கொப்பேகடுவ

[கொழும்பு]

''1977ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு, நடந்து முடிந்த இத்தேர்தலை நோக்கினால் எமது கட்சிக்கும் மக்களின் ஆதரவு ஐ. தே. க. வை விட அதிகரித்துள்ளது. எமக்குக் கிடைத்த வாக்குகள் கடந்த பொதுத்தேர்தலைவிட 9.3 வீதத்தால் அதிகரித்துள்ளன. ஆனால் ஐ. தே. க. வுக்கு கடந்த தேர்தலில் கிடைத்ததைவிட 2சதவீதமே கூடுதலாக வாக்குகள் கிடைத்துள்ளன. இந்நிலை ஐ. தே. க. வின் வெற்றி தற்காலிகமானதென்பதையே எடுத்துக்காட்டுகின்றது''.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தேர்தல் முடிவுகளையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''இந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சிக்கு போட்டியிடுவதற்குக் கிடைத்தகாலம் மிகவும் குறைவானதே. அப்படியிருந்தும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இப்போட்டியைத், தமது போட்டியாக எடுத்துக்கொண்டு எனக்கு அதிகதுணிவை மக்கள்கொடுத்தனர். ஆகையினால் இத்தேர்தலில் எனக்காகப்பாடுபட்ட சகலரதும் முயற்சிகளையும் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்''.

'நான் எப்போதும் மக்களுடனேயே இருப்பேன். இத்தேர்தல் முடிவு எப்படியானாலும் நான் ஒருபோதும் அரசியலில் இருந்து பின்வாங்கப் போவதில்லை. இதுவே தற்போதைய நிலைமையில் நான் மக்களுக்கு வழங்கக்கூடிய ஒரேயொருவாக்குறுதியாகும்'' என்றார். [கி]

## ஜனாதிபதி ஜே. ஆருக்கு அமெரிக்க அதிபர் வாழ்த்து!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன வெற்றி பெற்றமைக்கு அமெரிக்க அதிபர் திரு றொனல்ட் றீகன் வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்

தனிப்பட்ட முறையிலும் அமெரிக்க மக்கள் சார்பிலும் இவ்வாழ்த்துச் செய்தியை அவர் அனுப்பிவைத்துள்ளார். இச்செய்தியில் திரு. றீகன், அமெரிக்காவும் இலங்கையும் ஜனநாயக கொள்கையில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளவை யென்றும் மக்கள் இத்தேர்தலில் சுதந்திரமாக வாக்களித்துள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றதென்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இலங்கை அமெரிக்கா ஆகியனவற்றுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு நட்புறவு ஆகியன எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்று தெரிவித்ததுடன் இவ்விருநாடுகளும் தொடர்ந்தும் உலக அமைதி பொருளாதார வளர்ச்சி ஆகியனவற்றுக்காக பாடுபடுமென்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஜனநாயகக்குடியரசின் அதிபர் கலாநிதி கார்ல் காஸ்டனும் ஜனாதிபதி ஜயவர்த்தனவுககு வாழ்த்துத் தெரிவித்துள்ளார் இவர் தமது வாழ்த்தில் நிதானமான கொள்கையுடன் இலங்கை தொடர்ந்து முன்னேறும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தீ விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிடுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியகடையில் ஏற்பட்ட தீவிபத்து குறித்து விசாரணை நடாத்தும் யாழ். மாநகராட்சிமன்ற விசாரணைக்குழுவினர் மின்சாரப்பத்திரக் கோவை தீவிபத்து நடைபெற்ற இடம் ஆகியவற்றை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிடவுள்ளனர்.

யாழ், மாநகராட்சி மன்றத் தலைவர் திரு இராஜா விசுவநாதன், தீவிபத்து சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்துக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

ஆணையாளர் திரு. சிவஞானம் தலைமையில் மின்சாரக் குழுத்தலைவர் திரு. செ குமாரவேலு, சுகாதாரக்குழுத்தலை

[8ம்பக்கம் பார்க்க]

## பாராட்டும் நன்றியும்

[கொழும்பு]

ஜனாதிபதித் தேர்தலின் போது பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மேற்கொண்ட சேவையினை தேர்தல் ஆணையாளர் பாராட்டியுள்ளார்.

''தேர்தல் காலத்தி பொதுசனத்தொடர்பு சாதனங்களின் சேவை பொதுமக்களுக்கும், தேர்தல் திணைக்களத்துக்கும் ஓர் இணைப்புப் பாலமாக அமைந்திருந்தது என்று ''தேர்தல் ஆணையாளர் தமது பாராட்டில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸ் சேவையினருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துள்ள ஆணையாளர் ''தேர்தல் காலத்தில் கடமையாற்றிய அரச ஊழியரின் சேவையையும் பாராட்டி அவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார். (கி)

## வவனியா அபிவிருத்தியில் ஜனாதிபதி அக்கறை

(வவனியா]

வவனியா தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி பிரமுகர்களையும் மாவட்ட நகரசபை ஐ தே க. உறுப்பினர்களையும் அழைத்துப் பேசுவதற்கு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன சம்மதித்திருக்கிறார்.

வவனியா தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

திரு. புலேந்திரன் ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

வவனியா தொகுதி அபிவிருத்தி, வேலைவாய்ப்பு பற்றியும் அவர் ஜனாதிபதியிடம் விளக்கியதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## கண்டனம்

லண்டன் அக். 23

இலங்கையின் 14 கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட் போட்டி

[8ம் பக்கம் பார்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

Wheel-burrows நல்ல தரத்திலும், குறைந்த விலையிலும் எம்மிடம் பெறலாம் விற்பனையாளர்களும் பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கும் இடம்: டைனமிக்என்ஜினியறிங்லிமிற்றெட், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. 4919

வதிரி அரசடிப் பாடசாலை வீதியில் வீடுவளவுவிற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்க K. சிவசோதி மந்திரிமடம், வதிரி. 4920

பாவனைக்குரிய DeepFreezer (ஐஸ்பெட்டி) விற்பனைக்குண்டு விபரங்கட்டு நேரில்தொடர்பு கொள்ளவும் பூம்புகார் றேட் சென்டர். 116, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பரணம். 4923

11சிறி357 இலக்கம்கொண்ட Morris oxford கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு, தொடர்புகொள்க V. C. பிரான்சிஸ், மதுவரி நிலையம் கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 4925

ஜேர்மன் வயலின் சிறிது காலம் பாவிக்கப்பட்டது விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் ந கந்தசாமி, அம்பலவாணர் பாதை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம், (பரமேஸ்வராச்சந்திக்கு அண்மையில்) 4928

## விற்பனைக்கு

உரும்பிராய் - இணுவில் ஸ்ரேசனுக்கு அருகாமையில் 2¾ பரப்பும் நவாலி கத்தோலிக்க கோவிலுக்கு அருகாமையில் பிரதானவீதியில் 1½ பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; 11, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. 4929

1 சிறி A/35 முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட சொந்தப் பாவிடபில் உள்ள கார் விற்பனைக்குண்டு. கலனுக்கு 45 மைலுக்கு மேலாக ஓடக்கூடியது, தொடர்பு: 834, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4918

கோப்பாய் கிளாஸ் பக்ரறிக்கு அருகாமை வீதியில் 33 பரப்புகாணி கிணற்றுடன்விற்பனைக்குண்டு. இரண்டு பக்கமும் போக்குவரத்து வசதி உண்டு. விபரங்களுக்கு ந. சண்முகராஜா, பலாலி றோட், கோண்டாவில், 4893

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதியில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் 1½ பரப்பு காணி வீடு கடைகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். T. கணேசன் "சத்தியபவான்" 34, பலாலி வீதி திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம். 4890

எலெக்ரோலக்ஸ் 5அங் குளிர் சாதனப்பெட்டி, பிலிப்ஸ் ஸ்பூல் ரேப் றெக்கோடர் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. 341, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம். 4826

## விற்பனைக்கு

நல்லூர் வடக்கு சந்திரசேகரம் பிள்ளையார் கோவில் - கலைமகள் வீதியில் வீடு கட்டுவதற்கேற்ற காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. இராசநாயகம் மே/பா திருமதி ப. பொன்னுத்துரை. கலைமகள் வீதி, நல்லூர். 4887

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் பயிற்சி 25-10-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி 9/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4906

## வாடகைக்கு

வைத்தியப் பிரிவு பல்கலைக்சழக மாணவர் இருவருக்கு தங்குமிட வசதியுண்டு. பிரதான பஸ் பாதையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அண்மையில் தனியான படுக்கை, படிப்பு அறை வசதிகளுடன் சகலநவீனவசதிகளும் உண்டு. இலகுவான வாடகை, சிபார்சுடன் விண்ணப்பிக்கவும். 341, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம். 4827

பெரியகடை அருகில் அப்பையா கடைச்சந்தியில் விசாலமான கீழ் வீடுகளும், மேல் வீடும், முகப்புக்கடையும் பின்சாணியுடன், Tutory, firm nursing home அல்லது businessக்கு உகந்தது தேவைப்படின் உடன் இரண்டு நாட்களுக்குள் முடிவு சொல்ல வேண்டும் விபரங்கட்கு: 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் போன்: 22335 4931

## தேவை

நெல்லியடி சந்திக்கருகாமையில் சகல வசதிகளும்கொண்ட பிரபல்யமானஒட்டுக்கடையை நடத்துவதற்கு மனேஜர் தேவை. தொடர்பு இராஜேஸ்வரி, கொடிகாமம் வீதி, கரவெட்டி. 4885

யாழ்ப்பாணத்தில், படப்பிடிப்பு நடைபெறவிருக்கும், வீடியோ சினிமாவுக்கு, நடிகர் நடிகைகள் தேவை. புகைப் படத்துடன்எழுதவும், ஏ. பிலிப் சிவபுர வீதி, வல்வெட்டித்துறை, 4930

திறமையும், அனுபவமும், நேர்மையும் உள்ள விற்பனையாளர்கள் தேவை. அத்துடன் மும்மொழிகளிலும் பயிற்சிபெற்ற கணக்குப்பிள்ளை தேவை. இம்மாதம் 25-10-82 க்குமுன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். சீமாட்டி ஜவுளி சமுத்திரம், இல. 158, நவீனசந்தை, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 4891

## பயிற்சி

பைண்டிங், அச்சுக்கோர்த்தல், மெஷின்மைன்டிங் பழக விரும்புவோர் விண்ணப்பிக்கவும் 25-10-82இல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் விபுலானந்த அச்சகம், 248/5 கே.கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4926

## WANTED

Wanted employment in Jaffna aged 29 well experien--ced in official procedures ability to do correspondence and typing and good knowl--edge in English seeking management or Similar capa--city. Apply: The advertiser Adv. No: 4912, C/o Eelanadu, Jaffna. 4912

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற விசுவலிங்கம் அழகக்கோன் கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3682

விசுவலிங்கம் அழகக்கோன் கைம்பெண் சிவயோகேஸ்வரி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
தா. குலஞானம்
பதிவாளர்

1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் நாளாம் இன்று தேதியிடப்பட்டது, 4911

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

மீண்டும் யாழ் நகரில் துரித விற்பனையாகிறது

## யப்பான் கம்பனியாரின் உன்னத தயாரிப்பிலான

# GENERAL COLOUR T. V. NIPPON ANTENNA

(10 GY ALL CHANNEL)

**Nippon Booster (110 D B)**

மிகவும் குறைந்த விலையில் சிறந்ததை வாங்கி இன்புறுங்கள். வியாபாரிகட்கு விசேட கழிவுண்டு.

தெளிவான படத்திற்கும் திறமையான கலருக்கும் மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரே ரெலிவிசன்

## ஜெனரல் கலர் ரெலிவிசன்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

# றேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24222

(4907)

---

# மீன்பிடி வலை தொழிற்சாலை
# பதவி வெற்றிடங்கள்

1. **மின்னியலாளர்கள்:**

   அரச தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் இரண்டு வருட மின்சார பொறியியல்துறை பயிற்சி பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலும், தொழில்துறை ஒன்றில் இரண்டாண்டுகள் பணிபுரிந்த அனுபவமுமிருத்தல் வேண்டும்.

2. **பாதுகாப்பு உத்தியோகத்தர்:**

   சிறப்பான விளையாட்டு சாதனைகளுடன் விழிப்புணர்வுள்ள இளைஞர்களாகவும், ஆங்கில அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். இருவரின் சிபார்சு தேவை.

3. **சைக்கிள் பணியாளர்:**

   22 வயதுக்குட்பட்ட இளைஞர்களாகவும், பாடசாலை விளையாட்டுக்களில் வெற்றியீட்டியவர்களாகவும் இருத்தல்வேண்டும். மோட்டார் சைக்கிள் செலுத்தும் - மும்மொழிகளிலும் பேசும் ஆற்றல் இருத்தல் விரும்பத்தக்கது.

4. **பணியாளர்:**

   25 வயதுக்கு உட்பட்டவராகவும், சைக்கிள் ஓடத்தெரிந்தவராகவும், குறைந்தது இருமொழிகளில் பேசும் ஆற்றல் உடையவராகவும் இருத்தல்வேண்டும்.

சொந்தக் கையெழுத்தில், சான்றிதழ் பிரதிகளுடன், எதிர்பார்க்கும் சம்பளத்தை குறிப்பிட்டு நடுவர்கள் இருவர்பெயர் விபரங்களுடன் த. பெ. எண்: 1199, கொழும்பு என்ற விலாசத்திற்கு மனுச்செய்க.

# "உலக நாடுகள் அணுவாயுத யுத்தத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!'

## ஐ. நா. பொதுச்சபையில் இந்திய பிரதிநிதி கோரிக்கை

நியூயோர்க், அக். 23

"உலகில் அணுவாயுத யுத்தமொன்று ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உலக நாடுகள் இதுதொடர்பாக தமது கவனத்தைச் செலுத்தவேண்டும்."

இவ்வாறு இந்தியப்பிரதிநிதி ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''வல்லரசுகள் இன்று அணு ஆயுதங்களைப் பெருமளவு உற்பத்தி செய்து உலகின் பல பகுதிகளிலும் குவித்துவருகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

''இந்த அணு ஆயுதக் குவிப்பு மனிதகுலத்தின் வாழ்வுக்கு ஊறு விளைவிப்பதாகவுள்ளது. அணு சக்தியை மனித குலத்தின் நன்மைக்குப் பயன்படுத்த வேண்டுமேதவிர, அதனை அழிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது. இதனையே இந்தியா வும் வற்புறுத்திவருகிறது.

''அணு ஆயுத உற்பத்திக்கு செலவிடும் பணத்தைக் குறைத்து அவற்றை வளர்முக நாடுகளுக்கு அளிக்க செல்வந்த நாடுகள் முன்வரவேண்டும்'' என்ருர்.

## இந்தியா-ஜெர்மன் வர்த்தக உடன் படிக்கை

புதுடில்லி, அக், 23

இந்தியாவும், ஜெர்மன் ஜனநாயக குடியரசும் வர்த்தக உடன் படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இதன் பிரகாரம் தொழில் நுட்ப உபகரணங்கள், இரசாயண உரைவகைகள் ஆகியவற்றை இந்தியாவிற்கு ஜெர்மனி வழங்க உள்ளது. [வெ]

## "இந்தியாவில் நீதித்துறை அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை" சட்ட அமைச்சர் கூறுகிருர்

புதுடில்லி, அக் 23

"இந்தியாவில் நீதித்துறை அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. நீதித்துறையை எமது அரசு மதித்துவருகிறது''

இவ்வாறு இந்திய சட்ட அமைச்சர் புதுடில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச வழக்கறிஞர்கள் சங்க மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சட்டம் உறுதியாக நீடித்து நிலைக்க வழக்கறிஞர்கள் உதவ வேண்டும். சட்டத்தை உறங்கவிடாது நீதியை நிலைநாட்ட வழக்கறிஞர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

''இந்தியாவில் வாழுகின்ற சகல இன மக்களையும் நீதியான முறையிலேயே மத்திய அரசு நடத்தி வருகிறது'' என்ருர். (வெ)

## கிராம அதிகாரிகள்

சென்னை, அக், 23

தமிழ்நாட்டில் கிராம அதிகாரிகளாக 5,245 பேர் நியமிக்கப்படவுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ் டி. சோமசுந்தரம் தெரிவித்தார். [வெ]

## சுதந்திரவீரர் ஓய்வூதியம் அதிகரிப்பு

சென்னை, அக், 23

சுதந்திர போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தில் 100 ரூபா அதிகரிக்கப் பட்டுள்ளது.

1980ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து இது அமுலுக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ)

## ஈரான் எதிர்த்து வாக்களிப்பு

நியூயோர்க், அக், 23

ஈரான் - ஈராக்யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று ஐ. நா. பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக ஈரான் வாக்களித்துள்ளது. (வெ)

## சுனில்காவஸ்கர் காப்டஞக நியமனம்

புதுடில்லி, அக், 23

அடுத்தமாதம் பாகிஸ்தான் செல்லவுள்ள இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனாக சுனில்காவஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கோஷ்டியில் இடம்பெற்றுள்ள 16 பேர்களின் பெயர்களும் நாளை அறிவிக்கப்படவுள்ளது. (வெ)



# ஐ. நா., மேற்கு நாடுகளின் கைபொம்மையாகின்றதா?

இன்று ஐ. நா. தினம் உலகின் அமைதியை கட்டிக் காப்பதற்கென உருவாக்கப்பட்ட இந்த உலக சபை அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவையே. இந்த முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியளிக்காது போனாலும் உலகில் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய நிலைமைகளைத் தணிப்பதில் அது முக்கியபங்குவகித்து வருகின்றது என்பதை மறக்கமுடியாது.

மத்திய கிழக்கின் நெருக்கடி கொரியயுத்தம், வியட்னாம் போர் போன்ற நிலைமைகள் உலக யுத்தமாக விரிவடையாமல் கட்டுப்படுத்துவதற்கு ஐ. நா. பெரிதும் உதவியுள்ளது.

என்றாலும் இந்த ஸ்தாபனத்தின் செயற்பாடுகளை ஒரு சில வளர்ந்த நாடுகளே கட்டுப்படுத்திவருவதும் இதன் நீதி நியாயமான காரியங்களை தடுக்கமுற்படுவதும் கண்கூடு.

உலக நீதிக்கு எதிராகக் குற்றம்புரியும் நாடுகள் மீது ஐ. நா. தனது அதிகாரவரம்புக்குள்ளான நடவடிக்கைகளைக் கூட உரியகாலத்தில் எடுக்க முடியாமலும், பாதிக்கப்படும், நாடுகளுக்கு விரைந்து உதவ முடியாமலும்வல்லரசுநாடுகள் முட்டுக் கட்டைபோட்டுவருகின்றன.

மத்திய கிழக்கில் குறிப்பாக இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கவனித்தால் இந்த நிலைமை புரியும்.

இஸ்ரேலின்தான்தோன்றித்தனமான செயல்களைக் கண்டிக்கவும், கட்டுப்படுத்தவும் ஐ. நா. பொது சபையில் பல நாடுகள் முயற்சி எடுத்தன. முக்கியமாக பாதுகாப்புசபையில் கொண்டுவரப்பட்ட பல தீர்மானங்களும் அமெரிக்கா போன்றநாடுகளினால்வீட்டோ செய்யப்பட்டு விட்டன.

ஆசிய ஆபிரிக்க நாடுகளையே அதிகமாகக் கொண்ட இந்த மகாசபை ஒருசில மேற்கு நாடுகளில் கைப்பொம்மையாக மாறுவது தவிர்க்கப்படவேண்டும். வளர்ந்த நாடுகளின் மிதமிஞ்சிய நிதியங்கள் வளர்முக நாடுகளுக்கு சென்றடையக் கூடிய வழிவகைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்கு நாடுகள் இந்தபோக்கினைபரிகசிப்பதுபோலவும் வேண்டா வெறுப்பாகவும் நடக்கத்தலைப்பட்டிருப்பது கவலை தருவதாகும்.

ஐ நா. சபைமேற்கு வல்லரசுகளின் கைப்பாவையாக மாறிவருவதின் காரணமாக இந்த சபைக்கு எதிராகவே வெறொரு இயக்கத்தை ஆரம்பிக்கவும் கூட 'லிபியா' போன்ற நாடுகள் ஆலோசித்து வருகின்றன.

பி. எஸ். பி.

மேற்கு நாடுகளும் வல்லரசுகளும்தொடர்ந்தும்ஐ நா.வை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கமுற்பட்டால் இச்சபையின் எதிர்காலம் கவலைக்குரியதாகிவிடும். மாற்றுவழிகள் பற்றி வளரும்நாடுகளும்ஆசிய ஆபிரிக்க நாடுகளும் ஆராய வேண்டியேற்படும்.

குற்றம் புரியும் இஸ்ரேல், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளைப்பாதுகாக்க பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் சில தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி வருகின்றன. இதனால் ஏனைய நாடுகள் இதில் மதிப்பிழக்கத் தொடங்கியுள்ளன.

மேற்கு நாடுகள் தமதுஇந்த போக்கினை மாற்றவேண்டும். அல்லது அவைகளுக்குள்ள வீட்டோ அதிகாரத்தை நீக்க வேண்டும்.

நாடுகளின் அத்துமீறிய செயல்களையும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் உடனுக்குடன் தடுத்து நிறுத்தும் உரிமையும் வலிமையும் ஐ. நா. வுக்கு இல்லையெனில் இந்த ஸ்தாபனத்தினால் பயனில்லை யென்றே சொல்லவேண்டும்,

## இன்று ஐ. நா. தினம்

# ஐ. நா. சபையும் அதன் சில அமைப்புகளும்

1945ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி ஐ. நா. சாஸனம் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்பொழுது 51நாடுகள் அதில் அங்கம்வகித்தன. இப்பொழுது 157 நாடுகள் உறுப்புரிமைபெற்றுள்ளன.

1948 செப்டம்பர் 17ம் திகதி ஐ. நா.வின் உலகளாவிய மனித உரிமைகள் சாஸனம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1971 டிசம்பர் 13ல் கம்யூனிஸ்ட் சீனா ஐ. நா.வில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

ஐ நா.வின் புதிதாக ஒரு நாடு சேர்வதானால் அதுபற்றிய தீர்மானம் ஒன்று பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்படவேண்டும் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகள் அதை விரும்பினால் 'வீட்டோ' செய்யமுடியும். பின்னர் அத்தீர்மானம் பொது சபையால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

ஐ நா.வின் செயலாளர் நாயகமே பிரதான நிர்வாக உத்தியோகத்தராவார். ஐ. நா.வின் முதலாவது செயலாளர்நாயகம் நோர்வேயைச் சேர்ந்த ட்ரைக்வி லீ பதவி வகித்தார். அடுத்து சுவீடனைச் சேர்ந்த டாக் ஹமார்ஷ்ஜோல்ட் நியமிக்கப்பட்டார். 1961ம் ஆண்டு கொங்கோவுக்கு உத்தியோகபூர்வமாகப் பிரயாணம் செய்கையில் விமான விபத்தில் அவர் மரணமானார் இதன்பின் பர்மாவைச் சேர்ந்த திரு. யுதான்ட் நியமனம் பெற்றார். ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த திரு. குர்த் வால்தீம் அடுத்து பதவிவகித்தார். இப்பொழுது ஜாவியர் பெரெஸ்டி குயெல்லர் செயலாளர்நாயகமாக இருக்கிறார்.

## பொதுச்சபை

ஐ நா,வின் பொதுச்சபையே அதன் பிரதான விவாத அரங்காகும். ஐ நா வின் சாஸனத்துக்குட்பட்ட விடயங்களை இதுவிவாதிக்கும் சகல உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் அங்கம்வகிக்கிறார்கள். இச்சபைக்கு ஒவ்வொரு கூட்டத்தொடரின்போதும் தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவார்.

## பாதுகாப்புச்சபை

நாடுகளின் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது இச்சபையின்பொறுப்பு. இதில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்புரிமைபெற்றுள்ளன. அவை:- பிரிட்டன், சீனா, பிரான்ஸ், சோவியத்யூனியன், ஐக்கிய அமெரிக்கா, இரண்டு ஆண்டுகளுக்குப் பதவிவகிக்கும் 10 நாடுகளும் உண்டு. இவைகளை பொதுச்சபை தெரிவுசெய்யும். இச்சபையில் விவாதிக்கப்படும் விஷயங்கள் பெரும்பான்மை உறுப்பினர்களால் 'வீட்டோ' செய்யப்படுவதின்மூலம் செல்லுபடியாகாமல் செய்யலாம். அங்கத்துவநாடு ஒன்று பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை பெறாவிட்டாலும் அந்நாடு பற்றிய விஷயம் ஒன்று விவாதிக்கப்படும்போது அதில் கலந்து கொள்ள உரிமையுண்டு.

உறுப்பு நாடுகள் யாவும் இச்சபையின் தீர்மானங்களை செயல்படுத்த கடமைப்பட்டுள்ளன.

பாதுகாப்பு சபை தவிர ஆயுத ஒழிப்பு ஆணைக்குழு, ராணுவ அலுவலர் குழு, பொருளாதார சமூகக் கவுன்சில், நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை. சர்வதேச நீதிமன்றம் போன்ற பிரிவுகளும் உண்டு.

இவை தவிர விசேஷ முகவர் சபைகளும், சுயாதிக்க அமைப்புக்களும் செயல் படுகின்றன.

### தென்னாபிரிக்காவுக்கு

# கடன் வழங்க வேண்டாம் பொதுசபைத் தீர்மானம்

தென்னாபிரிக்காவுக்கு சர்வதேச நிதி நிறுவனம் கடன் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானம் ஐ நா. பொதுச்சபையில் நிறைவேறியிருக்கிறது.

ஐ நா. வின் இலட்சியங்களுக்கும், நியாயங்களுக்கும் மாறாக நடக்கும் நாடுகளுக்கு தொடர்ந்து உதவுவதில் அர்த்தமே இல்லை யென்பதை பொதுச்சபையின் இத்தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது.

ஐ நா. வின் ஓர் அங்கமான சர்வதேச நிதிநிறுவனம் தென்னாபிரிக்காவுக்கு கடன் வழங்குவதானது அதன் நிற ஒதுக்கல் கொள்கையை மேலும்தீவிரப்படுத்தவும் [தென்மேற்கு ஆபிரிக்கா] நமீபியா மீது அது கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பைஸ்திரப்படுத்திக் கொள்ளவும் உதவும் முயற்சியாக முடியும் என்று மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

146 நாடுகளைக் கொண்ட சர்வதேச நிதிநிறுவனம் ஐ. நா, வின் கீழ் இயங்கும் சுதந்திர அமைப்பாகும். பொதுச்சபையின் தீர்மானம் இதைசகட்டுப்படுத்தாது. ஐ. நா. விலிருந்து தென்னாபிரிக்கா வெளியேற்றப்பட்டிருந்தாலும் மேற்படி நிதிநிறுவனத்தில் அது தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மேற்படி தீர்மானம் பொதுச் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அமெரிக்கா, மேற்குஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பிரான்ஸ், கனடா போன்ற 23 நாடுகள்வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை 121 நாடுகள் ஆதரித்தன பாதுகாப்புச் சபையிலும் இதே போன்ற தீர்மானம் கொண்டுவரப்படும் என்று தெரிகின்றது.

## பேனா நண்பர்

கானாவைச் சேர்ந்தஅல்பர்ட் ஜஸ்டிஸ் மென்ஷா என்பவர் இலங்கையில் பேனாநண்பர்களை விரும்புகிறார். இவருக்கு 14 வயது. இவரது பொழுதுபோக்கு கால்பந்தாட்டம், ஓடுதல், டென்னிஸ், ஹாக்கி முகவரி வருமாறு: Albert Justice Mensha, P. O. Box 188, Cape Coast, Ghana.

### முழுவதும் பெண்களே நடித்த

# ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து

ஆனைக்கோட்டையில் சில ஆண்டுகளாக இயங்கி வரும் 'ஆனையூர் மகளிர் கலா மன்றம்' பன்னெடுங்காலமாக மரபு முறையில் எழுதி நடிக்கப்பட்டு வந்த தென்மோடி முறையிலான 'ஞானசவுந்தரி' என்னும் நாட்டுக்கூத்து சில செப்பமான திருத்தங்களுடன் முற்றிலும் பெண்களைக் கொண்டு சமீபத்தில் இரு தடவைகள் மேடையேற்றப்பட்டது.

உற்சாகமான ஆரவாரத்துடன் [பெண்களாக இருந்தபோதும்] அனைவரும் சிறப்பாகவே நடித்தனர் என்றுதான் சொல்லவேண்டும். குறிப்பாக அரசர்களாக நடித்த செல்வி ச. அற்புதராணி [துலுக்கி அரசன் செல்வி யொ. றெஜினா [தர்ம அரசன்] ஆகியோர் அனுசயமாகப் பாடி நடித்தனர்' செல்வி பே. மீரா [2-வது பிலேந்திரன்]வின் கச்சிதமும், அழகும், துறுதுறுப்பும் கி. செல்வவதி [3-வது பிலேந்திரன்]யின் மாத்திரத்தையொட்டிய பொருத்தமான ஆடலும், பாடலும் செல்வி த. ராஜி [1-வது பிலேந்திரன்]யின் கம்பீரமும், உற்சாகமும், மேடை ஆளுமையும், செல்வி வ. வரதமணி [3-வது ஞானசவுந்தரி யின் குரலில் இழைந்தெழுந்த ரீங்கார குயிலிசையும், அழகிய அசைவுகளும், செல்வி வி. அ. வதனி [2-வது ஞானசவுந்தரி] யின் உணர்ச்சிவசமான நடிப்பும், கனிவான இசைப்பும், செல்வி யோ. அருந்ததி [1-வது யேனுல் 2-வது சிமியோன்]யின் துணிச்சலான வலுமிக்க லாவகரமான நடிப்பும் கூத்தின் விறுவிறுப்பைக் காட்டின.

செல்விகள் தி. கலா [சேனாதிபதி] ஸ்ரீ பிறிஜிற்ரா [ஞானம்] ஆகியோர் சிறப்பாக தமது ஆற்றலை வெளிப்படுத்தி தமது பணியைத் திருப்திகரமாக நிறைவு செய்தனர். செல்வி அ. இமில்டாவின் வருகை ஒவ்வொன்றும் கூத்துக்குக் களை கட்டியது. வயதுக்கு மீறிய மிக அற்புதமான ஆற்றல் இவருக்கும் மற்றும், செல்விகள் இரத்தினகுமாரி, சரோஜினி, கில்டா, புஷ்பராணி, அஞ்சலா, புஸ்பராணி, ரூஜி, சசி, கலா, ஜெனிற்றா, பிறிற்ரு, ஜூடிற்ரு ஆகியோரின் வேடப் பொருத்தம், நடிப்பு, பாடல் யாவும் கனகச்சிதம். இக்கூத்தில் சிறுபாத்திரங்களில் நடித்திருந்த போதும் சகலரும் தமது பங்கை சீரிய முறையில் நிறைவு செய்தது விசேஷ அம்சமாகும்.

கூத்தை நெறிப்படுத்திய முறையும், அரங்க அமைப்பும், காட்சிகளின் துரிதகதியும் பின்னாலிருந்து இயங்கியவர்களின் திறமைக்கு ஓர் அத்தாட்சி. கலைமணி- அண்ணாவியார் சு. தம்பித்துரை அவர்களின் நட்டுவாங்கமும், திரு ஆரோக்கியநாதனின் நட்டுவாங்க அரங்கேற்றப்பணியும், திரு. யோ. டேவிட் அவர்களின் காட்சி நிகழ்வு அமைப்பும் இந் நாடடுக் கூத்து ஆளுமையின் வெற்றிச் சிறப்புக்கள்.

சில சந்தர்ப்பங்களில்பாடல் வசனம், மறந்ததால் எழும்பிய சங்கடமான தயக்கங்கள் சற்றுத் தலைகாட்டின. ஒலி அமைப்பு திருப்திகரமாக இருந்தபோதும் பின் இசைகளின் ஆதிக்கம் கொஞ்சம் கூடித்தான் போய்விட்டது. (நடிகைகளின் தாளலயப் பிசகை அமைதிப்படுத்த பின்னிசைகள் அதிகரிக்கப்பட்டதோ? ஒளி அமைப்பிலும் கவனம் வேண்டுமல்லவா?

மொத்தத்தில் பல்வேறு அலுவல்களுக்கிடையே கலை ஆர்வத்துடன் ஒன்றுசேர்ந்து மக்களை மகிழ்விக்க வந்த இருபத்திரண்டு கலைச் செல்விகளையும் பெருந் திட்டங்களுடன் உருப்பெற்றிருக்கும் இம்மன்ற இயக்குநர்களையும் மனமாரப் பெரிதும் பாராட்டலாம்.

- 'பொன். வசந்தன்'

# தேர்தல் முடிவுகளும் ஆணையாளர் அறிவிப்பும்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வானொலியில் அதிகாலை தொட்டே மும்மொழிகளிலும் அறிவிக்கப்பட்டுவந்தன.

இறுதியாக வெற்றிபெற்றவரின் பெயரை தேர்தல் ஆணையாளரே அறிப்பார் என்பதும் மும்மொழிகளிலும் அறிவிக்கப்பட்டது.

இதற்கெல்லாம் தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா கச்சிதமாக ஒழுங்கு செய்திருந்தார். ஆனால் என்ன காரணத்தினாலோ கடைசியில் வெற்றி பெற்றவரைஅறிவிக்கும்போது சிங்களத்தில் மாத்திரம் அறிவித்து ஆங்கிலம் தமிழ் மொழி பெயர்ப்புகளுக்கு அவர் இடம் கொடுக்காமல் போனது கவலைக்குரியது.

உத்தியோகப் பூர்வமாக அவர்விடுத்த அறிவித்தல் ஆங்கிலம் தமிழ்மொழிகளிலும் மொழிபெயர்த்துக் கூறப்பட்டிருக்கவேண்டும்.

தமிழுக்கு தேசிய அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது என சில தினங்களுக்கு முன்னர் தான் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களே வானொலி பேச்சில் நினைவூட்டினார். தமிழ் மொழியின் அந்த நிலையை மாற்றவிரும்பாவிடில் தமக்கே வாக்களிக்கும்படி அவர் தமிழ் மக்களைக் கேட்டிருந்தார்.

வடக்குக் கிழக்கில் ஐக்கிய தேசியக்கட்சியைப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஆதரிக்காது போனாலும் கொழும்பிலும் மலைநாட்டிலும் தமிழ் பேசும் மக்கள் திரு. ஜயவர்த்தனாவையே பெரும்பாலும் ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். இதனை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை ஜனாதிபதியாக அவர் வெற்றிபெற்றது பற்றி அறிவிக்கட்பட்டதையடுத்து அவர் சில நிமிடங்கள் நிகழ்த்திய உரையை உடனடியாக வ தமிழில் மொழிபெயர்க்க செய்தார்.

ஆனால்தேர்தல் ஆணையாளர் தமது அறிவிப்பை சிங்களத்தில் மாத்திரம் செய்து சிங்களம் தெரியாத மக்களுக்கு உத்தியோக பூர்வமான அறிவித்தலை கேட்க முடியாமல் செய்துவிட்டார்.

0 0 0

ஜனாதிபதி தேர்தலை ஒட்டி பந்தயம் பிடித்தவர்களில் தோற்றுப்போனவர்கள் இப்போது தாம் ஒப்புக்கொண்டதை நிறைவேற்றி வருகிறார்கள்.

தலையை மொட்டையடிப்பவர்களும், மீசையை சிரைத்துக்கொள்கிறவர்களும் தென்பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறார்களாம்.

ஒருவர் வாழ்க்கை முழுவதுமே மொட்டையடித்துக் கொள்வதாகப் பந்தயம்பிடுத்திருந்தார். என்ன செய்வாரோ?

0 0 0

தலதா மாளிகை யானையை ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன குணமாக்கியதன் காரணமாக நலமையடைக்கூடும் என்ற கருத்துப்பட பி. எஸ். பி. சில வாரங்களுக்கு முன்

[5ம் பக்கம் பார்க்க]

# தீயுடன் போராடி உயிர் நீத்த வீரர்கள்!

அபாயமணியின்தொடர்ச்சியான அலறல் ஒலியுடன் தீயணைக்கும் படைவண்டிகள் மின்னல் வேகத்தில் லண்டன் வீதிகளில் செல்வதைக்கண்டிருக்கிறேன் அந்த வண்டிகளில் ஊழியர்கள் வெகுவேகமாக வண்டியிலிருந்தபடியே உடைகளை அணிந்துகொண்டிருக்க வண்டிகள் பறக்கும்!

ஒரு நாள் மாலை—

விம்பிள்டன் நகரில் வர்த்தக நிலையங்கள் நெருக்கமாக அமைந்துள்ள பகுதியில் பத்து மாடிக்கட்டடம் ஒன்று திடீரெனத்தீப்பற்றி எரிவதை பார்த்தேன்!

'ஆ ஸ்வேர்த்' என்ற வர்த்தக நிறுவனத்தின் உச்சமாடியில் தீ முதலில் பிடித்துக் கொண்டது. அந்தவீதியால், நான் நடந்து வந்து கொண்டிருந்தபோது, மாலை நான்கு மணியிருக்கும். சில நிமிடங்கள் முன்னதாகத்தான் தீ பற்றிக்கொண்டது! அந்த நிறுவனத்தில் வேலைசெய்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வெளியே வந்து விட்டார்கள்!

கோடிக்கணக்கான மதிப்புள்ள பொருட்களையும், கட்ட

பொலிஸ் அதிகாரிகள் தீ அணைக்கும் படையினருக்கு உதவியாக நின்று, போக்குவரத்தினைத்தடுத்து நிறுத்தி பொதுமக்களை குறிப்பிட்ட பகுதிகளுக்குள் வராமல் செய்துகொண்டிருந்தனர்.

## புகைமண்டலம்

இதற்குள் தீமேலும் பரவத் தொடங்கியது! எங்கும் புகை மண்டலமாகிக் கொண்டிருந்தது! தீ அணைப்பு வீரர்கள் உயிரைத்துச்சமென மதித்து தீயுடன்போராடிக் கொண்டிருந்தனர்!

நீண்டதூரத்திலி து தண்ணீர் பெறக்கூடிய 'பைப்புகளை'ப்பொருத்தி, தண்ணீரை ஒரு பக்கம் எடுத்து, வேகமாக எல்லாத்திசைகளிலிருந்தும், ண்ணீரைத் தீக்கு திராக டித்துக்கொண்டிருந்தனர்!

மூன்று தி அணைப்பு வீரர் ள் மேல்மாடிக்குள் தண்

அனுமதித்தார்கள்!

## சுறுசுறுப்பு

சுறுசுறுப்பான டி. விக்காரர்களையும், பக்திரிகையாளர்களை அங்கு கண்டேன்!

இரவு எட்டு மணியாகிவிட்டது—

ஜன்னல் ஊடாக உள்ளே சென்ற மூன்று வீரர்கள்பற்றியும் திடீரெனப் பரபரப்பு!

எப்படியோ வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த

எப்படியோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மத்தியில், வீரர்கள் 'என்ன ஆனூர்கள்?' என்ற கேள்வி எழத் தொடங்கிவிட்டது!

எவ்வளவு நவீன வசதிகள் கொண்ட தீ அணைப்புப்படையினராலும் தீயை அணைக்க முடியவில்லை!

எப்படியோ கீழ்ப்பகுதியில் உள்ள சாமான்கள் எரிந்தது டன், தீயின் சீற்றமும் தணிந்தது!

ஓங்கி உயர்ந்து நின்ற கோபுரம் போன்ற கட்டடம் தரைமட்டமாகக் காட்சியளித்தது!

தீ மற்றைய பகுதிகளுக்குப் பரவாமல் தீ அணைக்கும்படையினர் தம்மாலானதைச் செய்திருந்தனர்!

தீயுடன் போராடி காணமல் போன இரு வீரர்களின் சடலங்கள் எரிந்து கருகிய எலும்புக் கூடுகளாக இடிபாடுகளுக்

அன்று அவரது கடமை முடிந்து மாலை நான்கு மணிக்கு வீடு செல்ல வேண்டியவர் அந்த இளைஞர்!

ஆனூல், அசரமாக இந்தக் கட்டடம் தீப்பற்றியுள்ளதாகச் செய்தி கிடைத்ததால், இங்கு வந்து, தன்வாழ்வையே பறிகொடுத்தார்!

அடுத்த நாள் —

பி. பி. ஸி. டி வி.யில், அவரது இளம் மனைவியை டி.வி.க்காரர் நேரில் சென்று அவரது நிலைமையை நேரில் பேட்டியாக எடுத்து ஒளிபரப்பினூர்கள்!

## உயிரையும் மதிக்கவில்லை!

ஒரு வயதுக் கைக் குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாக அழுதபடி, ''ஐந்து மணிக்கு 'ரோசி' யின் 'பேர்த்டே'க்கு வந்துவிடுவேன் என்று சொன்னூர்! எங்கே இனி அவரைக் காண்பேன்?'' என்று கூறினூர்.

இருவருடத்துக்கு முன்னர் தான் கைப்பிடித்துக்கொண்டாராம்!

## நெஞ்சம் மறவாத நினைவுகள்—13

ராஜகோபால்

டத்தையும்யோசித்துக்கொண்டுடிக்கமுடியுமா?

வாளியால் தண்ணீர் ஊற்றி அணைக்கக்கூடிய விஷயமா? தீ அணைக்கும் படைக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. சிலநிமிட நேரங்களில் தீ அணைக்கும் படையினர் வண்டி வண்டியாக வந்து சேரத்தொடங்கினர். வண்டிகளிலிருந்து ஏணிகள் மேலே உயரத்தொடங்கின

லண்டனில் கட்டடங்கள் எல்லாம் ஒன்ருேடு ஒன்று இணைந்து நெருக்கமாக இருப்பதால், அக்கம்பக்கத்திலுள்ள கடைக்காரர்களும், குடியிருப்பாளர்களும், தமது இடங்களை விட்டு அகலத்தொடங்கினர்!

வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் குறிப்பிட்ட எல்லைக்கு வெளியே நிற்கக்கூடிய வகையில் கயிறுகள் கட்டப்பட்டு, போக்குவரத்து அடைக்கப்பட்டது.

ணீர்ப் பைப்புடன், ஜன்னல் வழியாக ஏணியிலிருந்து பாய்ந்து நுழைவதைக் கண்டேன்!

தீயை அணைக்க எவ்வளவோ போராடிக்கொண்டிருந் தார்களோ, அதைவிட வேகமாக தீ பரவத்தொடங்கியது!

இதற்குள் டி. விக்காரர்கள் ஒரு பக்கம்! 'வீடியோக் காமிராக்'களை வைத்துக்கொண்டு கோணம்கோணமாக படமாக்கிக்கோண்டிருந்தார்கள்.

பத்திரிகைக்காரர்கள் மற்ருெரு பக்கம்! 'காமிராக்கள்' எரியும் காட்சியை படம்பிடித்துக்கொண்டிருந்தன! நிருபர்கள் அங்குமிங்குமாக ஓடிச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தனர்!

டி. விக்காரர்களையும், பத்திரிகைக்காரர்களையும் எரிகிற இடத்தில்—பொதுமக்கள்போக முடியாதபகுதிகளுக்குச் செல்ல

இரவு ஒன்பது மணிக்கு நான் நண்பர் வீட்டில் (பி பி ஸி.) டி.வி. யை பார்த்துக் கொண்டிருந்தேன். ஆங்கிலச் செய்தி!

''விம்பிள்டன் 'ஆல்ஸ் வேர்த்' எரிந்து கொண்டிருக்கிறது; தீயைஅணைக்கப்போராடிய மூன்று வீரர்களைக் காணவில்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது!''

—எனக்கு ஒரே அதிர்ச்சி. அந்த மூன்று வீரர்களும் ஜன்னல் ஊடாகக் குதிப்பதை நான் என் கண்களாலேயே கண்டேன்! ஒருவர் மிக மிக வயதில் குறைந்தவர். இருபத்து ஐந்து வயதுதான் இருக்கும்!

அடுத்த நாள் —

காலை ஏழு மணிக்கு 'ஆல் வேர்த்' எப்படியிருக்கிறது என்று பார்க்க நான் தங்கியிருந்த வீட்டைவிட்டு வெளியே வந்தேன்! அரை மைல் தூரத்திலேயே எனது இடம் இருந்த போதும், புகைமண்டலத்தை அங்கிருந்தே பார்க்கக்கூடியதாக இருந்தது!

—வேகமாக நடந்தேன்!

மாடிக் கட்டடங்கள் எல்லாம் எரிந்து, கடைசி இரு கட்டடங்களோடு தீ விளையாடிக் கொண்டிருந்தது!

குள்ளிலிருந்து மீட்டனர்.

ஒரு வீரரது சடலம் எரிந்து சாம்பலாகிவிட்டதாக நம்பப்பட்டது.

டி. வி. நிகழ்ச்சியில் இந்தச் செய்தியும், வீரர்களது படங்களும் ஒளிபரப்பப்பட்டது!

இருவர் 40 வயதுக்காரர். இறந்த மற்றைய வீரருக்கு 28 வயது!

கடமைக்காக உயிரையும் மதியாதவர்கள் வெள்ளைக்காரர்கள்!

இதன்பின்னர்—

பத்திரிகைகள் மூலம் அந்த இளம்பெண்ணுக்கு'உயிரிழந்த கணவர் அனுதாப நிதி'யாக லட்சக்கணக்கில் பணம் சேர்த்துக்கொடுக்கப்பட்டது!மற்றிருவரது குடும்பங்களுக்கும் உதவி இப்படி வழங்கப்பட்டது.

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

பன்ஞலை கணேச சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று மாலை நிலையத் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது. இலக்கண வித்தகர் இ. நமசிவாயம் தலைமையில் பட்டிமன்றமும், திரு. வை. சொக்கலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## நடேஸ்வரா வெற்றி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியும், சிங்கப்பூர் மாலுமிகளும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியொன்றில் நடேஸ்வரா அமோக வெற்றிபெற்றது

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் இடம் பெற்ற இந்த உதைபந்தாட்டப்போட்டியில் நடேஸ்வரா வீரர்கள் 6 கோல்களைப் போட்டனர். சிங்கப்பூர் மாலுமிகள் கோஷ்டியினர் ஒரு கோலை மட்டுமே போட்டனர்.

இறுதியில் 6—1 கோல்களால் நடேஸ்வரா வெற்றிபெற்றது

இப்போட்டிக்கு திரு. அணுக்குமார் நடுவராக இருந்தார்.

மேற்படி மைதானத்தில் நடந்த மற்ருெரு உதைபந்தாட்டப் போட்டியில் நடேஸ்வரக் கல்லூரிக் கோஷ்டியும் காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றமும் மோதிய சமயம் நடேஸ்வரா 1—0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. முருகேசு நடுவராக இருந்தார்.

## ரூ.10,000 ஒதுக்கீடு

[மன்னூர்]

தலைமன்னூர் கிராமியபொது விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்காக 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியில் 5ஆயிரம் ரூபா தலைமன்னூர் புனித லோறன்ஸ் ஆலயத்திலும், மிகுதி 5ஆயிரம் ரூபா மன்னூர் எம். பி. திரு. எஸ். சூசைதாசனின் பன்முக வரவு செலவு திட்டத்தின் கீழும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க)

## தேர்தல்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கட்டுரை எழுதியிருந்தார் அல்லவா? அதைப் பற்றி குறைப்பட்டவர்களும் இப்போது 'சரி'யென்று ஒப்புக்கொள்கிறூர்கள்.

0 0 0

இந்திய வம்சாவளியினரையெல்லாம் பௌத்தர்களாக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேடபாளர் அப்படியே நிராகரித்துவிட்டிருப்பாரானூல் இந்திய மக்களின் அனுதாபத்தை அதிகம் பெற்றிருக்கலாம்.

அதுபற்றி ஆலோசிப்பதாக அவர் கூறியிருந்தது ந்த நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டது.

இந்திய வம்சாவளியினர்மட்டுமின்றி ஏனைய இன-மதங்களைச் சார்ந்தவர்களும் இதைவிரும்பியிருக்கமாட்டார்கள்.

- 'பேனு'


OPTIMATIC PICTURE CONTROL

என்ற அதிவிசேஷ அம்சத்தின் மூலம்
காட்சிகளின் தனித்தன்மையைக் கண்டுகளிக்க



இன்றே
யப்பான் (JAPAN) நாட்டு
உற்பத்தியான
சாப் கலர்
டெலிவிஷன்களை
SHARP
Colour TELEVISIONS
வாங்குங்கள்

உங்கள் டெலிவிஷனை
பாதுகாக்க, காட்சிகளை ஒரேசீராகபார்க்க
இன்றே ஒரு
வோல்ற்ரேஜ் ஸ்ரபிலைஸர்
[VOLTAGE STABILIZER]
இணைப்பைப் பொருத்துங்கள்

கிடைக்குமிடம்:
ஈஸ்வர் கோப்பறேசன்
18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. எண் : 23308



BAYER

மிளகாய், தக்காளி, புகையிலை, காய்கறிவகை
நாற்று மேடைகளில் அடி அழுகலை அறவே தடுக்க,
நாற்று மேடை தொற்று நீக்கி
மோறுட் பாவியுங்கள்
நோயற்ற நாற்றுகளை பெற ஒரே வழி மோறுட்
மேற்கு ஜேர்மன் பாயர் தயாரிப்பு மோறுட்
இலங்கையில் தயாரிப்பாளர்:
ஹேகெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் றேட், கொழும்பு 10.
(4721)

## "கலை, இலக்கியத் திறனாய்வினால் உண்மை வெளிப்படும்"

(யாழ்ப்பாணம்)

"கலைகளையும் இலக்கியங்களையும் திறனாய்வு செய்கின்றபோது தான் அதன் உண்மைத் தன்மைகளைக் காணமுடியும். அப்போதுதான் கலைகளோ, இலக்கியங்களோ மற்றும் எந்தத் துறைகளோ புதுப்பொலிவு பெறுகின்றன."

இவ்வாறு இணுவில் அ. மி. த. க. பாடசாலை மூன்றலில் நடைபெற்ற கலை இலக்கிய இளைஞர் வட்டத்தின் ஆரம்ப விழாவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவிலும் தலைமை வகித்துப் பேசிய திரு. துரை எங்கரசு குறிப்பிட்டார். அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்.

"நாம் பாரதியாரின் இலக்கியப்படைப்புகளை ஒவ்வொரு கோணங்களிலிருந்தும் அலசி ஆராய்வதற்கே பாரதி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்றோம் என்றும், இதேபோன்று தமிழ் இலக்கியப்படைப்புக்கள் யாவற்றையும் திறனாய்வு செய்வதும், மதிப்பீடு செய்வதும் புதிய இலக்கியங்கள் வளரவும், புதிய தலைமுறை எழுத்தாளர்கள் மலர ஆவன செய்வதற்கே மேற்படி கலை இலக்கிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. என்றும் குறிப்பிட்டார்.

'பாரதி கண்ட கல்விச் சமுதாயம்' என்ற தலைப்பில் கல்வித்துறைப்பீடாதிபதி பேராசிரியர் திரு. ப. சந்திரசேகரமும் 'தேசிய இயக்கங்களின் பார்வையில் பாரதி' என்ற பொருளில் கரவைக் கிழார் திரு. க கந்தசாமியும் 'பாரதியின் மனோநிலை' என்ற பொருளில் நவாலியூர் நா. சச்சிதானந்தனும் உரையாற்றினார்கள்.

இதனைத்தொடர்ந்து கவியரங்கு பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (மா)

தென்னாபிரிக்கா சென்ற

# கிரிக்கெட்வீரர்களுக்குஎதிராக கடும் நடவடிக்கை

## 25 வருடங்களுக்கு தேசிய கிரிக்கெட் ஆட்டங்களில்கலந்து கொள்ளத்தடை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் உத்தரவையும் மீறி கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ள தென்னாபிரிக்கா சென்ற இலங்கையின் 14 கிரிக்கெட் வீரர்களுக்கும் எதிராக கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கடும் நடவடிக்கையெடுத்துள்ளது.

இவர்களை 25வருடங்களுக்கு தேசிய கிரிக்கெட் ஆட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லையென்றும் இலங்கைக்கிரிக்கொட் கட்டுப்பாட்டு சபை தீர்மானித்தூள்ளது.

அத்துடன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டிகளிலும் இவர்களை விளையாட அனுமதிப்பதில்லையென்றும் அது தீர்மானித்துள்ளது.

இந்த 14 கிரிக்கெட்வீரர்களும் இலங்கையைப்பிரதிநிதித்துவப் படுத்தவில்லையென்றும் கிரிக்கட் கட்டுப்பாட்டுசபை அறிவித்துள்ளது.

இன ஒதுக்கல் கொள்கையை கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்காவுடன் எந்த விதமான தொடர்புகளையும்வைத்திருப்பதில்லையென்ற ஐ. நா. சபையின் தீர்மானத்தை இவர்கள் மீறியுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 கிரிக்கெட் வீரர்களும் கிரிக்கெட் விளையாட்டிற்குஅபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை கூறியுள்ளது.

இவர்கள் தொடர்பாக கிரிக்கெட்கட்டுப்பாட்டுசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி லண்டனிலுள்ள சர்வதேச கிரிக்கெட் சபைக்கும்அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விஜயத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் தென்னாபிரிக்காவிலும் செயற்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாம்.

கிரிக்கெட் ஆட்டத்தை பிரபல்யப் படுத்துவதற்காகவே தாம் தென்னாபிரிக்கா சென்றுள்ளதாக இக்குழுவின் தலைவர் திரு. பந்துலவர்ணபுர தெரிவித்த கருத்தை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை செயலாள கண்டித்துள்ளார்.

இவர்கள் பணத்திற்காகவே அங்கு விளையாட முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [வெ]


R. P. G. - II - ஆர். பி. ஜி. II
Computer Programming Course

# கம்பியூட்டர் நிகழ்ச்சிமுறைப் பயிற்சி நெறி

I. B. M. System / 34 Computer
(I. B. M. முறைமை R. P. G. II கம்பியூட்டர் நிகழ்ச்சி முறைப் பயிற்சி நெறி)

R. P. G. II நிகழ்ச்சி முறையினைக் கற்று கம்பியூட்டர்

விற்பன்னராகுங்கள்

| | |
|---|---|
| பயிற்சி முறை: | 8-11-1982 திங்கட் கிழமை முதல் ஆறு வாரப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. |
| நிலை i | எண்முறைக் கம்பியூட்டருக்கு அறிமுகப்படுத்தல். |
| நிலை ii | நிகழ்ச்சி முறை பற்றிய எண்ணக் கருவூட்டம். |
| நிலை iii | R. P. G. 11 நிகழ்ச்சி முறையிடல். |
| நிலை iv | விடயப்படிப்பு PRACTICAL TRAINNING ON COMPUTER. |
| நிலை v | கம்பியூட்டர் மூலம் கம்பியூட்டர் பயிற்சி. COMPUTER ASSISTED TRAINING |
| பயிற்சிக் கட்டணம்: | ரூபா 6,000/- மட்டுமே. |
| கல்வித்தகைமை: | க.பொ.த.(சாதாரணம்) கணிதம் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| தெரிவு: | உளச்சார்புப் பரீட்சையின் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். |

R. P. G. II நிகழ்ச்சிமுறைப் பயிற்சி பெற்ற விற்பன்னர்கட்கு இலங்கையில் மட்டுமின்றி அகில உலகத்திலும்

வேலை வாய்ப்பு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டியது:

GLOBAL COMPUTERS (PTD) LTD.
குளோபல் கம்பியூட்டர்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
இல: 14, 1/1, ஸ்ரப்ஸ் பிளேஸ், கொழும்பு-5
14, 1/1, Stubbes Place, Colombo-5
தொலை தொடர்பு: 580551

மேலும் விபரங்கட்கு:-
குளோபல் கொம்யூனிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்.
(யாழ். கூட்டுறவு பன்முகப் பணிமனைக் கட்டிடம்)
127, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

பிறர் வாயாற் கூறுவதை குளோபல் செயற்படுத்தும்


## திருமதி பூட்டோவின் உடல்நிலை மோசம்

இஸ்லாமாபாத், அக். 23

பாகிஸ்தான் அரசாங்கத்தினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள திருமதி பூட்டோவின் உடல்நிலைமோசமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவரின் நுரையீரலில் புற்றுநோய்ஏற்பட்டுள்ளதையடுத்து உடல்நிலை மோசமடைந்ததாக கூறப்பட்டது. தற்போது இவர் சோர்ந்துபோய். நடக்க முடியாத நிலையிலுள்ளாராம்.

இவரை வைத்திய சிகிச்சைக்காக வீயன்னாவிற்கு செல்லுமாறு வைத்தியர்கள் ஆலோசனை கூறியிருந்தனர். வீயன்னா செல்வதற்கு இவருக்கு அனுமதி வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் மறுத்துவிட்டது. (வெ)

# யன்னல் உடைத்து பொருட்கள் திருட்டு

(மாவிட்டபுரம்)

வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று மாதகலில் இடம்பெற்றுள்ளது.

மாதகல் வில்வளை என்னுமிடத்தைச் சேர்ந்த இராமசாமி குணசேகரம் என்பவரது வீட்டிலேயே இது நடந்தது.

இரவு நேரம் வீட்டில் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருந்ததாகவும், அச்சமயம் மழையும் பெய்து கொண்டிருந்ததாகவும், இவற்றை சாதகமாக்கிக்கொண்ட திருடர்கள் வீட்டின் பின்புற யன்னலை உடைத்து உட்புகுந்து சுமார் 6000 ரூபா பெறுமதியான சேலைகள், துணிமணிகள், வானொலிப்பெட்டி, கைக்கடிகாரம், வெள்ளிச் சங்கிலி, 50 ரூபா பணம் ஆகியவற்றை திருடிச் சென்று விட்டதாகவும், அதிகாலையில் எழுந்து பார்த்தபோதே திருட்டு பற்றி தெரிய வந்ததாகவும் காங்கேசன்துறைப் பொலிசில் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுப் பற்றி பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [க]

## பாராளுமன்றம் கூடுகிறது

(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது சம்பந்தமாக ஆராய பாராளுமன்றம் எதிர்வரும் வியாழக்கிழமைம கூடுகிறது.

அவசரகாலச்சட்டத்திற்கான காரணத்தைத்தெரியப்படுத்துவதற்கான காரணத்தைத் தெரியப்படுத்துவதே பாராளுமன்றத்தை ஜனாதிபதி கூட்டுவதன் நோக்கமாகும்.

இச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பத்துநாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்பட்டு, காரணத்தைத் தெரியப்படுத்தி ஆராயவேண்டுமென்பது புதிய அரசியல் சட்டத்தின் விதிகளில் ஒன்றாகும். இதனைத் தொடர்ந்தே குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகப் பாராளுமன்றம் கூட்டப்படுகிறது.


யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## இன்று

யாழ்ப்பாண ]

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின் 8ம் நாள் நவராத்திரி விழா இன்று ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய படிப்பகத்தில் மன்றத்தலைவர் திரு. வெ. அன்பழகன் தலைமையில் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனை, பட்டிமன்றம், நாடகம் ஆகியனவும் இடம்பெறும். [க]

மாரீசன் கூடலில்

# நகைகளுடன், அரிசி கருவாடு, மிளகாய் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

வீடொன்றினுள் புகுந்து கலாட்டாபண்ணிய கோஷ்டியொன்று அங்கிருந்த 5000 ரூபா பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றதாம்.

மாரீசன்கூடல் அந்தோனியார் கோவிலடியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாரீசன்கூடல் அந்தோனியார் கோவிலுக்கருகாமையில் வசிக்கும் கந்தன் முத்தம்மா என்பவரது வீட்டுக்கு இரவு நேரம் சென்ற கோஷ்டியொன்று கத்தியைக்காட்டி மேற்படி பெண்ணையும் அவரது மருமகளையும் பயமுறுத்தியசமயம் அவர்கள் பயந்து ஓடிவிடவே வீட்டிலிருந்த 2பவுண் தங்கச்சங்கிலி, கால் பவுண் மோதிரம், மணிக்கூடு, 10 இருத்தல் கருவாடு, 10 கொத்து அரிசி, செத்தல் மிளகாய் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றதாம்.

இவை சுமார் 5000 ரூபா பெறுமதியானவையெனவும் காங்கேசன்துறைப் பொலிசில் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாரையடுத்து இதில் சம்பந்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் மாதன் வேலன், மாதன் பெரியான், முருகன் குணரட்ணம், மாணிக்கம் அருமைத்துரை வேலன் வள்ளி(பெண்) பெரியான் சீதேவி (பெண்) ஆகிய சந்தேகநபர்களை காங்கேசன்துறை பொலிசார் தேடி வருகின்றனர். (க)

## மின்சார இணைப்பு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் எட்டுக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கைத்தொழில் மண்டபத்திற்கு ஐயாயிரம் ரூபா செலவில் மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது

மறைந்த வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு தா. திரு நாவுக்கரசு இதற்கான நிதி ஒதுக்கீட்டை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வரவேற்பு

[மட்டக்களப்பு]

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலத்திற்கு மட்டக்களப்பிலும், பட்டிருப்பிலும் நவம்பர் மாதம் 1ம் தேதி வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

வரவேற்புக்கான ஏற்பாடுகளை இப்பகுதி தமிழ் இளைஞர்கள் செய்துவருகின்றனர். [க]


## காணி விற்பனைக்கு

புங்கங்குளம் வீதியில் உள்ள சுந்தர் மணியம் ஒழுங்கையில் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி சுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும். (4913)



## ராஜா யாழ்.நகர்

தினசரி 4 காட்சிகள்

போடியார்- அடி பிள்ளை பாரதிராஜா, பாலசந்தர் படங்கள் எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுபோட்டார் பாக்கியராஜ்.

தங்கம்மா- அம்மான் அதில் முக்கியம் என்ன தெரியுமா சுட்டிப்பயல் நடிப்பு ஏ ஒன்.

பாக்கியராஜ்-சரிதா

**மௌன கீதங்கள்**

(ஈஸ்ட்மன் கலர்)

டைரக்ஷன்: பாக்கியராஜ்



## ஆய்வுத்தகவல்கள் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1865 — 1945 வரையிலான காலப்பகுதியில் சமய, இலக்கிய, சமூகசேவை, கலை, கல்வித்துறைகளில் சிறப்பும் தகைமைகளும் பெற்றிருந்த பெண் மணிகள் பற்றிய தகவல். ஆய்வு ஒன்றிற்காகத் தேவைப்படுகிறது தங்கள் முன்னோர் உறவினர் பற்றிய தகவல்களைக் கொடுத்துதவக்கூடியவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொண்டால் நேரில் வந்து சந்திக்க முடியும்.

வள்ளிநாயகி இராமலிங்கம்,
(குறமகள்) காங்கேசன்துறை. (4917)


மடுக்கந்தை கொலைவழக்கு

# நிபந்தனையுடன் எதிரி பிணையில்செல்ல அனுமதி!

[வவனியா]

இரண்டரை வருடங்களாக யாழ்ப்பாணம் ரிமாண்டில் இருந்துவரும் டபிள்யு. எம். குணரெட்ண பண்டாவிற்கு எதிரான கொலை, கொலை முயற்சி வழக்குகளில், அவர் சார்பில் சட்டத்தரணி திரு. கனக மனோகரனல் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட வவனியா மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி ஆசீர்வாதம் எதிரியை தலா ஐயாயிரம், மூவாயிரம் ரூபாய் பிணைகளில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

வாரந்தோறும் எதிரி வவனியா பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற வவனியா பொலிஸ் தலைமை அலுவலக பரிசோதகர் திரு. எஸ். குணவர்த்தன வின் கோரிக்கையை மன்று ஏற்றுக்கொண்டது.

குணரெட்ண பண்டாவிற்கு எதிராக 79 ஆகஸ்ட் 1ம் தேதி 5ம் கட்டை பண்டா என்றழைக்கப்படும் மணியார்குளம் லொக்குபண்டாரா என்ற தேனீர்க்கடை உரிமையாளரைச் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாகவும், ஆகஸ்ட் 79 ஆகஸ்ட் 7ம் தேதி மடுக்கந்தை வாசியான எம். பி. புத்ததாச என்ற ஆசிரியரைச் சுட்டுக்கொலை செய்ததாகவும், இருவழக்குகள் வவனியா நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

தலைமறைவாகத் திரிந்த எதிரியை பொலிசார் பலத்த தேடுதலின்பின் 1980ம் ஆண்டு ஜனவரி மாதம் கைதுசெய்திருந்தார்கள்.

வவனியா நீதிமன்றத்திலிருந்து கொண்டுசெல்லும் போது சிறைக்காவலர்களின் பாதுகாவலில்இருந்து தப்பியோடி மீண்டும் கைதுசெய்யப்பட்டமையால் பண்டா யாழ். சிறைச்சாலையில் விசேட பாதுகாப்புப்பிரிவில் வைக்கப்பட்டிருந்தார். (க)


## மனோகரா [யாழ் நகர்]

தினசரி 4 காட்சிகள்

21–25 வரை

நாகேஸ்வரராவ்-பானுமதி

**கானல் நீர்**



இன்று மட்டும்

## ராணி (யாழ் நகர்)

தினசரி 10-30, 2-30, 6-00, 9-30

சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்

**ராஜராஜசோழன்** (கலர் சினிமாஸ்கோப்)

நாளை முதல் பெண் தெய்வம்



## பரதநாட்டிய வாய்ப்பாட்டு

### புதிய வகுப்புகள் ஆரம்பம்

''அரஸ்கோ நிர்த்தனாலயம்''

விஜயதசமி அன்று (26-10-82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி முதல்
பரதநாட்டிய வகுப்புகளும் வாய்ப்பாட்டு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

நாட்டிய கலைமணி நளினி அரசரத்தினம்,
''கந்தன் அருள்'',
54, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 23175 (4921)



சில தினங்கள் மட்டும்

## வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி 6-15, 9-15

சனி, ஞாயிறு 2-30

கமலஹாசன்

**ராஜபார்வை**



## ஹரன் (யாழ். நகர்)

தினசரி 4 காட்சிகள்

முத்துராமன்–காஞ்சனா

**காதலிக்க நேரமில்லை**

(புதிய பிரதி) (கலர்)



## வெலிங்டன்

(யாழ். நகர்)

தினசரி 4 காட்சிகள்

ரஜீவ் - ஜோதி

**ரயில் பயணங்களில்**

(கலர்)



## லிடோ [யாழ்.நகர்]

தினசரி 4 காட்சிகள்

**லவகுசா**

பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்



ஸ்ரீராம ஜயம்

பொன்னாலை அருள்மிகு
ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## சனீஸ்வர கிரக மாற்றம் விசேட அர்ச்சனை, வழிபாடு

காலம்:

துந்துபி வருஷம் ஐப்பசி மாதம் 12-ம் நாள்
வெள்ளிக்கிழமை (29-10-82) பகல்

சனீஸ்வர தோஷம் உள்ளவர்கள் மேற்படி தினத்தில் ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சனீஸ்வரபகவானுக்கு தோஷ நிவிர்த்திக்காக விசேட அர்ச்சனை, வழிபாடு செய்துகொள்ளலாம்.

சுபம்

தேவஸ்தானம்,
பொன்னாலை, சுழிபுரம்.

22-10-82. [4927]



## வின்ஸர் (யாழ். நகர்)

குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்
2-வது மாதமாக

தினசரி 4 காட்சிகள்

சந்திரசேகர்--சுபாஷினி

**பாலைவனச் சோலை**



## சாந்தி (யாழ்.நார்)

தினசரி 4 காட்சிகள்

ஷா நவாஸ் - சுமதி

**பாதைமாறிய பருவங்கள்**


# கான்ஸ்டபிளுக்கு மீண்டும் வேலை!

(மாவிட்டபுரம்)

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விசாரணையின் பின் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் சடமை புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள். திரு. கார்த்திகேசு பொலிஸ்நிலையத்தில் துப்பாக்கிவேட்டுத் தீர்க்கப்பட்ட சம்பவம் ஒன்றையடுத்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

விசாரணையின் பின் இவர் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். (க)


## ரீகல் (யாழ். நகர்)

தினசரி 10-30, 2-30, 6-30, 9-30

ரஜினிகாந்த் — ரதி

**முரட்டுக்காளை** (கலர்)



## ஸ்ரீதர் (யாழ் நகர்)

Daily 10-30, 2-15, 6-00, 9-30.

**A BRIDGE TOO FAR**

(War Film)

நாளைமுதல் நெஞ்சில் ஓர் ஆலயம்



THE CENTRAL FINANCE COMPANY LIMITED
JAFFNA BRANCH

The following vacancies exist at our Jaffna Branch:

(1) TYPIST CUM CLERK (Male)

Qualifications:- G.C.E. (O/L) or S.S.C. Fluent in English with a typing speed of 35-40 w p m.
Age: Not more than 45 years.
Salary: Negotiable

Preferance would be given to those residing in close proximity to the Branch office.

(2) BUSINESS INTRODUCERS

Applications are invited from resident in and around Jaffna with good repute and influence to promote business in Hire Purchase Financing and Deposits

Remuneration would be on a commission basis. Applications giving full details accompanied by two testimonials should be forwarded within Seven (7) days to:-

The Director
The Central Finance Company Limited,
No: 250, K K S. Road, JAFFNA.

தெல்லிப்பழை

# புற்றுநோய் சிகிச்சைநிலையம் விரைவில் இயங்கும்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழையில் அமைக்கப்படும் புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கானகட்டடம் முடிவடையும் நிலையிலுள்ளது. ஒருமாத காலத்துக்கு முன்னர் இந்த ஆஸ்பத்திரியில் பொருத்துவதற்காக வந்த 'கோபால்ட்' யூனிட் அடுத்த மாதத்தில் அநேகமாகப் பொருத்தப்படும். இந்த 'யூனிட்'டைப் பொருத்துவதற்காக கனடாவிலிருந்து இயந்திர நிபுணர்கள் விரைவில் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புற்றுநோய் சிகிச்சைக்கவுன்சிலின் யாழ்ப்பாண நிலையம் தெல்லிப்பழையில், சிகிச்சை நிலையத்தை நிறுவுவதற்கும், 'கோபால்ட்' யூனிட்டைப் பெறுவதற்கும் பெரிதும் முயற்சி எடுத்து வந்தது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையும் ஆஸ்பத்திரி வேலைகளை முடிப்பதற்கு நிதி உதவி அளிக்கிறது.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவில்பற்று இந்துசமய விருத்திச்சங்க நவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

முதல்வர் வை. மகேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'தேவிபராக்கிரமம்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார். திருமதி லீலா செல்வராசாவின் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## இப்படியும் நடக்கிறது

கடந்த வியாழக்கிழமை.

காலை 6 20 மணி முதல் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வானொலியில் அறிவிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட பிரமுகரின் வீட்டில், ஒவ்வொரு தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் சின வெடிச்சத்தம் காதைப் பிளக்கிறது!

ஆதரவாளர் வீடு என்றால் இது செய்தி அல்ல. ஆனால் அப்பிரமுகர் ஐ. தே. கட்சி உறுப்பினரும் அல்ல.

அவர்; யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்!

'ஊடுருவி'

# நெல் மூடைகள் பதரான 'மர்மம்'

[மன்னார்]

மன்னார் - உயிலங்குளம் கமநல சேவை நிலையப்பண்ணையிலிருந்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விதை நெல்லில் 66 மூடை பதராக இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விதை நெல் மூடைகள் முருங்கன் அரசினர் விவசாயப் பண்ணையிலிருந்து உயிலங்குளம் கமநல சேவை நிலைய பண்ணைக்கு வழங்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விதை நெல் மூடைகளுடன் பதர் மூடைகளும் எவ்வாறு கலக்கப்பட்டதென்ற மர்மத்தை அறிவதில் மன்னார் விவசாயப் பணிப்பாளர் ஜனாப் எம். சி. எம். முத்தபா ஈடுபட்டுள்ளார். [க]

# குழப்பத்தில் முடிந்த கிரிக்கெட் பந்தயம்

கராச்சி அக். 23.

கராச்சியில் பாகிஸ்தானுக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் பந்தயம் குழப்பமொன்றையடுத்து இடைநடுவில் முடிவடைந்தது.

பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தபோது, ஆஸ்திரேலியா தனது 11வது ஓவர் பந்து வீச்சில் இறங்கியிருந்தது. அப்போது அரங்கிலிருந்த சுமார் முப்பதாயிரம் பார்வையாளர்கள் கூச்சலிட்டு ஆட்டக்காரர்களுக்கு இடைஞ்சல் விளைவித்தனர். இதனையடுத்து ஆஸ்திரேலிய அணியினர் தம்மால் தொடர்ந்து விளையாடமுடியாதென, மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

இதனைத்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சமரசத்தையடுத்து ஆஸ்திரேலிய அணியின் சிலமணிநேர தடங்கலுக்கு பின்னர் மீண்டும் மைதானத்தில் இறங்கினர். ஆட்டம் ஆரம்பித்து மூன்றாவது பந்து வீசப்பட்டதும் பார்வையாளர் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தினர். ஆட்டக்காரரை நோக்கி தடிகள், கல்லுகள் வீசப்பட்டன.

இவ்வாறு பார்வையாளரது குழப்பம் தொடர்ந்து காணப்படவே ஆஸ்திரேலிய அணியினர் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

குழப்பம் விளைவித்தோர் மீது கராச்சிப் பொலிசார் தடியடி கண்ணீர்ப் புகைப் பிரயோகம் ஆகியனவற்றை மேற்கொண்டனர். ஆட்டம் விளையாட்டு நடைபெற்ற மைதானத்தின் பார்வையாளர் பகுதியின் கூடாரங்கள் எரிக்கப்பட்டும் இருக்கைகள் நாசப்படுத்தப்பட்டும் இருந்ததென்று அறிவிக்கப்பட்டது. [கி-இ]

## தீவிபத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு. எஸ். சண்முகராசா மராமத்துக் குழுத் தலைவர் திரு. என். டி. செல்லத்துரை, மின்சாரப்பொறியியலாளர் மராமத்துப் பொறியிலாளர் ஆகியோர் கொண்டகுழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

மின்முகாமி திரு. எஸ். சந்திரபோஸ் மின்சார அத்தியட்சகர் திரு எஸ். காங்கேயநாதன் தீவிபத்து நடைபெற்ற தினம் மின்சாரப் பகுதியில் கடமையாற்றிய மூன்று ஊழியர்கள் வடஇலங்கை பாதுகாப்புச் சேவையிலுள்ள திரு. எஸ் கந்தப்பன், திரு. எஸ். தியாகராசா ஆகியோர் இதுவரை சாட்சியமளித்துள்ளனர். [மா]

## மின்சார விநியோகம்

[மன்னார்]

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு தற்போது தடங்கலின்றி மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதற்கென ஆலய நிர்வாக சபையின் புதிய ஜெனரேட்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஒரு லட்சம் ரூபா செலவில் ஆலயச் சுற்றுடலில் புதிய மின்சார இணைப்புக்க ஏற்படுத்தப்பட்டுள்ளன; [க]

# யாழ். நகர் மக்களுக்கு நன்றிதெரிவிக்கிறார்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின்போது யாழ். நகரில் சமாதானமும் அமைதியும் நிலவ ஒத்துழைத்த பொதுமக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கும் யாழ் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி திரு. சிவசம்பு தவலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வருகையின் போதும் 2வது முறையாக நடைபெற்ற பௌதீக பரீட்சையின் போதும் அமைதி நிலவ பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கியதற்கும் யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி நன்றிதெரிவித்தார். (மா)

ஜே. ஆர். வெற்றி

# மட்டுநகர் ஆலயங்களில் விசேட பூசைகள்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதிதேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெற்றி பெற்றதையிட்டு இங்குள்ள ஆலயங்களில் நேற்று விசேட பூசைகள் நடைபெற்றன.

பஸ்களில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் படங்களும் அமைச்சர் செ. இராசதுரை, அமைச்சர் ஜே டபிள்யூ தேவநாயகம் ஆகியோரின படங்களும் ஒட்டப்பட்டிருந்தன.

அமைச்சர் இராசதுரை நேற்று மட்டக்களப்பு தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு சென்று மக்களுக்கு நன்றி தெரிவித்தார். அடுத்த மாத நடுப்பகுதியில் மட்டக்களப்பில் மாபெரும் கூட்டமொன்றை நடாத்த ஐ தே. க. கிளையினர் ஏற்பாடு செய்துள்ளனர். (க)

சீமெந்து தொழிற்சாலையில்

# திருடப்பட்ட பைப்புகள் பொலிசாரிடம் சிக்கின!

(மாவிட்டபுரம்)

பற்றை மறைவினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சமயம் பொலிசாரால் மீட்கப்பட்ட சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புப் பைப்புகள் காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலையிலிருந்து திருட்டுப்போனவையே என்று ஊர்ஜிதம்செய்யப்பட்டுள்ளது

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அண்மையில் கீ மைலை கிருஷ்ணன் கோவிலுக்குச் சமீபமாக பற்றை மறைவினுள் மறைத்து வைக்கபபட்டிருந்த 20 அடி நீளமான 15 இரும்புப்பைப்புகளை இரகசியத் தகவலின்பேரில் அங்கு சென்ற காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் வி. தியாகராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கைப்பற்றியிருந்தது.

இப்பைப்புகள் காங்கேசன் துறை சீமந்துத் தொழிற்சாலையிலிருந்து திருடப்பட்டிருக்கலாமெனச் சந்தேகித்த பொலிசார் இதுபற்றிதொழிற்சாலை பாதுகாவல் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டிருந்தனர்.

இது பற்றி ஆராய்ந்த பாதுகாவல் அதிகாரிகள் இவை தொழிற்சாலையிலிருந்து திருடப்பட்ட பைப்புகளே என்று ஊர்ஜிதப் செய்துள்ளனர்.

இவற்றை பாதுகாவல் அதிகாரிகளிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (க)

## நைஜீரியாவில் நமது தேயிலை

லாகோஸ், அக் 23

இலங்கைத் தேயிலைக்கு நைஜீரியாவில் இப்போது நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

இலங்கை தேயிலைச் சபையைச்சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று நைஜீரியா சென்று திரும்பியுள்ளது.

இலங்கைத் தேயிலைக்கு பெருமளவில் நல்ல வரவேற்புக்கிடைத்திருப்பதை அறியக்கூடியதாக இருந்ததாக நைஜீரியா சென்று திரும்பிய குழு தெரிவித்துள்ளது.

நைஜீரிய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும். இலங்கைத் தேயிலையை அங்கு பெருமளவில் ஏற்றுமதிசெய்ய வாய்ப்பைப் பெற்றுள்ளது.

## கண்டனம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கலந்து கொள்ள தென்னாபிரிக்கா சென்றதை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கண்டித்துள்ளது. [வெ]

## தவறை..-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

''சில நேரங்களில் தவறுகளை சிலகாலம் சென்றே மக்கள் உணர்வது வழக்கம் அதுதான் இப்போது இலங்கையிலும் நடந்திருக்கிறது. விரைவில் இத்தவறை மக்கள் உணர்ந்து விடுவார்கள்'' என்றும் தமது அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட திரு, குருகணவீஜேவீரா தம்மை ஆதரித்த மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து அறிக்கை யொன்றை விடுத்துள்ளார். (இ)

## மினி 'பட்ஜட்'

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட 1982ம் ஆண்டுக்கான உபமானிய வரவு-செலவுத்திட்டம் இம்மாதம் 28ம் திகதி நடைபெறவிருக்கும் அபிவிருத்திசபையின் பொதுக்கூட்டத்தில் அங்கீகாரத்துக்கெடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா தலைமையில் யாழ். செயலகத்தில் இப்பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும் நல்லூர் எம் பி. யுமான திரு எம். சிவசிதம்பரம், அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. சு. நடேசு ஆகியோரினது பிரேரணைகளும் சபையில் கொண்டுவரப்படவுள்ளன. (மா)

## சென்பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்ட போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு பிரிவுகளிலும வெற்றியீட்டியது.

முதலாவது பிரிவில் 4-0 என்ற கோல்களாலும் இரண்டாவது பிரிவில் 10 - 0 என்ற கோல்களாலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

## தொகுதி வாரியாக முடிவுகள்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை தொகுதி வாரியாக வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையாளர் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்கிறது. (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.